# இலங்கை காணி, நிலமீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை காணி, நிலமீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 10**

அடிப்படை கணக்கீட்டு வழுவாகக் கருதமுடியாத ரூபா 9,846,599 கூட்டுத் தொகையான கீழே குறிப்பிடப்படும் பெறுமதிகள் முன்னைய ஆண்டின் செம்மையாக்கல்களாகக் கருதி ஆண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது. இவ்வாறு முன்னைய ஆண்டிற்குரிய சீராக்கல்களைச் செய்தல்கள் கூட்டுத்தாபனத்தினால் ஒவ்வொரு ஆண்டிலும் மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| | ரூபா |
|---|---|
| இலவசமாகக் கிடைத்த எரிபொருளின் பெறுமதி | 4,828,164 |
| எண்டேறமுல்ல நகர அபிவிருத்தி செயற்திட்டச் செலவினங்களைப் பதிவழித்தல் | (15,653,406) |

| | |
|---|---|
| தலவத்துகொட செயற்திட்டத்தில் பூர்த்தி செய்யப்படாத வேலைகளைப் பதிவழித்தல் | (320,930) |
| பிற்போட்ட வரி ஏற்பாட்டின் கணிப்பீடு செய்தல் வழுவினைத் திருத்துதல் | 20,992,771 |
| | ------------------------ |
| தேறிய பெறுமதி | 9,846,599 |
| | =========== |

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18**

சொத்தொன்றுக்கு பெறுமானத் தேய்விடல் அளவு அச்சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் முழுவதும் சீரான அடிப்படையில் பகிர்த்தளிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபன அலுவலக உபகரணங்களின் கீழேயே கணனி மற்றும் பாகங்கள் வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவைகளின் பெறுமானத்தேய்வு விகிதம் தீர்மானிக்கும் போது பயன்தரு ஆயுட்காலம் கவனத்திற் கொள்ளப்படாது ஏனைய அலுவலக உபகரணங்களாகக் கருதி 12.5% பெறுமானத் தேய்வு வீதத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 36**

அமைச்சரவையினால் கலைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ரீல் எஸ்டேட் தனியார் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை வங்கியின் நிலையான வைப்புக் கணக்கிற்குரிய வட்டி ரூபா 131,506 இனால் அதிகரித்து கணிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால்

ஆண்டின் வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி என்பன சமமான அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றில் வட்டிப் பெறுவனவாக ரூபா 151,999,000 தொகை காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 138,050,101 தொகையான வட்டிப் பணம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடமுடியாக்கடன் மற்றும் அறவிட முடியாக் கடன் ஒதுக்கமாக ரூபா 14,087,220 தொகை இனங்காணப்பட்டு அப் பெறுமதி விற்பனைச் செலவினங்களில் இருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் இப் பெறுமதி ஏனைய வருமானத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2011 ஆம் ஆண்டிற்காக முன்கொண்டு வரப்பட்ட ஒன்றிணைந்த ஐந்தொகையில் தகவல்களைக் காண்பிக்கின்ற நிரலில் மொத்தச் சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 7,457,254,000 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் தகவல்களை மாத்திரம் உள்ளடக்கியிருந்த ஐந்தொகையின் மொத்த சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 7,538,200,000 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தின் மொத்த வியாபரக் கடன்பட்டோர் மீதி ரூபா 175,442,000 ஆக இருந்ததுடன் அதில் 02 தொடக்கம் 05 வருடங்கள் வரையும் 5 வருடங்களுக்கு மேலாகவும் காலங்கடந்திருந்த நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 23,121,525 ஆகவும் ரூபா 47,642,636 ஆகவும் இருந்தன.

(ஆ) இரண்டு செயற்திட்டங்களிற்கு உரித்தான ஐந்து வருடங்களுக்கு முன் பெறப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையான ரூபா 3,277,941

இனை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணி விற்பனைக்காக பெறப்பட்ட முற்பணத் தொகை ரூபா 535,204,868 ஆக இருந்ததுடன் அதில் 4 தொடக்கம் 5 வருடங்கள் வரையும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்க்கப்படாது காணப்படுகின்ற மீதிகள் முறையே ரூபா 489,125,647 ஆகவும் ரூபா 1,038,104 ஆகவும் இருந்தன.

(ஈ) ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 4,611,864 தொகையான பொருட்கள் மற்றும் சேவைகள் வரி மீதி 2004 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படுகின்றதுடன் அம் மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்த ஒரு கம்பனியின் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 565,200 தொகையும் ஏனைய கடன்கொடுத்தோர்களின் பெறுமதி ரூபா 2,183,783 தொகையும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து காணப்படுவதுடன் அம் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஏனைய முற்பணப் பெறுவனவுகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,299,731 தொகையான ஐரோப்பிய பொருளாதாரப் பங்கு என்ற பெயரில் உள்ள முற்பணத் தொகை ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாத நானாவித கடன்கொடுத்தோரில் 07 அட்டுறு செலவின விடயங்களில் வரியாக அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 56,913,550 தொகை இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2010 திசெம்பர் 31 ஆம் திகதிய 2010/26 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | ஒப்பந்த அடிப்படையில் பதவியணியினரைச் சேர்க்கின்ற போது பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபம் | |
| | (i) 9.7 ஆம் பிரிவு | ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்காக சம்பளம் அல்லது படிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 06 உத்தியோகத்தர்களுக்காக சுற்று நிரூபத்தின் பிரகாரம் தேவையான அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 40,000 முதல் 140,000 வரையான வீச்சில் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் கூட்டுத்தாபனத்தின் உயர் மட்டத்திலுள்ள அவசரமாக வெற்றிடங்களை நிரப்பும் தேவையின் பிரகாரம் அனேகமாக வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்காக இவ் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப் பட்டிருந்ததாக தலைவர் அறிவித்திருந்தார் . |

| | | |
|---|---|---|
| | (ii) 9.3.1 (1) ஆம் பிரிவு | நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் பணிப்பாளர் சபையினாலும் உரிய அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்திற்கு உரிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. |
| (இ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 1 ஆம் பந்தி | சம்பளம் மற்றும் ஆளணி எண்ணிக்கை ஆணைக்குழுவின் சிபார்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன பெறப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 35,270,383 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பிரிவு | முறையான கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாமல் பெக்ஸ் ஊாடாக பெறப்பட்ட கூறு விலையின் அடிப்படையில் ரூபா 14,235,965 பெறுமதியான கேள்வி வழங்கப்பட்டிருந்தன. |

### 1.2.6 சர்ச்சைக்குரிய தன்மையிலாள விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியொன்றில் வீடமைப்புத் திட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 489,000,000 தொகையான முற்பணமொன்று முதலீட்டாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்டு இரு தரப்பினருடனும் 2007 யூன் 27 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 05 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் முதலீடுகள் மீது கூட்டுத்தாபனமும் நடவடிக்கை

எடுத்திருக்காததுடன் முதலீட்டாளர் காணியை மீள வழங்கியிருப்பின் உடன்படிக்கையின் பிரகாரம் 14 நாட்களுக்குள் மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாகையினால் தொழிற்படு மூலதன பிரச்சினைகள் எற்பட முடியுமென அவதானிக்கப்பட்டதுடன் உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்கோ அல்லது பாரிய வியாபாரப் பெறுமதியுள்ள இந்நிலத்தை வேறு முதலீட்டாளருக்கேனும் வழங்கி அதன் நலன்களை கூட்டுத்தாபனத்தைப் போன்றே சமூகத்திற்கும் வழங்குவது தொடர்பில் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியிருக்காமையும் அவதானிக்கப்பட்டது. முதலீட்டுச் சபையின் சிபார்சில் எஞ்சிய நடவடிக்கைகளைச் செய்வதாக தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனச் செயற்பாடுகளின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 398,656,336 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 135,580,563 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 263,075,773 தொகையான அதிகரிப்பினைக் காண்பித்தது. முன்னைய ஆண்டின் கடல் மணல் விற்பனை வருமானமான ரூபா 683,437,366 தொகையுடன் ஒப்பிடுகின்ற போது நடப்பாண்டில் அவ்வருமானம் ரூபா 1,793,419,487 வரை 162.41% இனால் அதிகரித்தமை ஒட்டுமொத்த நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) திறைசேரி ஏற்பாட்டின் அடிப்படையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற செயற்திட்டங்கள்**

---

(i) தலவத்துகொட வாய்க்கால் திரும்பும் செயற்திட்டம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் இச் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 12% ஆன ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் இச் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 206.3 மில்லியனுடன் ஒப்பீடுசெய்த போது ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு ரூபா 24.56 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) எப்பிடமுல்ல வாய்கால் திரும்பும் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அதன் முன்னேற்றம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 3% ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயமான ரூபா 7.77 மில்லியனுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 0.21 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(iii) ரம்பாலவத்த நீரை வழிந்தோடச் செய்வதற்காக 02 மதகுகளை (Sluice) நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் முன்னேற்றம் 6% ஆக இருந்ததுடன் அச் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 13.70 மில்லியனுடன் இணக்கஞ்செய்த போது அத்திகதியில் அச் செயற்திட்டத்திற்காக ரூபா 0.82 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடான காணி தீர்த்தல் செயற்பாடுகளுக்கான அங்கீகாரம் வழங்குவதற்காக 2011 ஆம் ஆண்டின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 33 மில்லியன் ஆக இருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 8.94 மில்லியன் மாத்திரமே

செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிசார் முன்னேற்றம் 8% உம் பௌதீகரீதியான முன்னேற்றம் 27% உம் ஆன ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. எவ்வாறாயினும் தாழ்நிலங்களை நிரப்புதல் தொடர்பாக ஏற்பட்டிருந்த வரையறைகளினால் இந்நிலைமை ஏற்பட்டிருந்ததாக தலைவர் அறிவித்திருந்தார்.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுவீகரிக்கப்பட்ட காணிகளை கையேற்கும் போது கவனத்திற் கொள்ளக் கூடிய தாமதங்கள் காணப்படுகின்ற காரணத்தினால் அதற்கான வட்டியாக ரூபா 232,279,614 இற்குக் கிட்டிய தொகையொன்றை வெளித்தரப்பினருக்கு செலுத்துவதற்கான நிலைமையொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இழப்பீடு செலுத்தும் செயற்பாடுகளை துரிதப்படுத்தி வட்டி செலுத்துவதை குறைப்பதற்கான வகையில் பிரதேச செயலகங்களுடன் போதியளவான தொடர்பாடலொன்று பேணப்படாதிருந்தமையினால் இவ்வாறான நிலைமை தோன்றியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. பிரதேச செயலாளர்களிடமிருந்து துரித முடிவுகள் கிடைக்கப்பெறாமை இந் நிலைமைக்கு காரணமாக இருந்ததாக தலைவர் அறிவித்திருந்தார்.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் ‘‘முதுன்’’ வாய்க்காலுக்கு அருகில் 151 ஏக்கர் அளவில் கையேற்கப்பட்டிருந்ததுடன் இந்த காணிகளை கையேற்பதற்காக இது வரையில் இழப்பீட்டுப் பணம் மற்றும் வட்டியாக ரூபா 45,462,719 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 113,223,362 தொகை இழப்பீடாகவும், ரூபா 134,525,935 தொகை வட்டியாகவும் செலுத்த வேண்டியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற்கூறப்பட்ட பிரதேசத்தின் வாய்க்கல்வழி மற்றும் சதுப்பு நிலங்களை முறையாகவும் துரிதமாகவும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் இக்காணி கையேற்கப்பட்டிருந்த போதிலும் தற்போது அண்ணளவாக 19 ஏக்கர் 1 றூட் 35 பேர்சஸ் அளவில்

அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதையினால் ஏற்படுகின்ற நிலைமையை சீராக்கும் வகையிலான புதிய திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் உரிய அபிவிருத்திச் செயற்பாடுகள் தாமதமடைந்ததாக தலைவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

(ii) அவ்வாறே அபிவிருத்தி செய்யப்பட்ட நிலத்தின் $3^1/_2$ ஏக்கர் அளவான பிரதேசத்தில் கோவிலொன்று முறையான அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. இக் காணியினை அபிவிருத்தி செய்வதற்காக கூட்டுத்தாபனம் ஆகக் குறைந்தது ரூபா 30.2 மில்லியன் தொகையைச் செலவிட்டிருந்ததுடன் அத்தொகையினை கோயிலை நிர்மாணித்த தரப்பினரிடமிருந்து அறவீடு செய்வதற்கோ அல்லது காணியை மீளக் கையேற்பதற்கோ கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) இக் காணியைக் கையேற்பதற்கு முன் அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் பொதுவான நடைமுறைகளுக்குப் புறம்பாக அதிகாரச்சட்டத்தின் 38(அ) உப விதிகளின் கீழ் காணி கையேற்றல்களில் எதிர்பார்த்த துரித அபிவிருத்தி ஏற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கடல் மணல் உற்பத்திக்காக 2005 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை செய்திருந்ததுடன் அவ்வெளிநாட்டு ஒப்பந்தகாரருக்கு அதற்கான இயந்திர உபகரணங்கள் சுங்கவரி தவிர்த்து வங்கிப் பிணைப் பாதுகாப்பின் அடிப்படையில் இறக்குமதி செய்வதற்கு இலங்கைச் சுங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் இறுதியில் அந்த உபகரணங்கள் மீள் ஏற்றுமதி செய்வதற்கோ அல்லது உரிய வரியைச் செலுத்தி இலங்கையில் விற்பனை செய்யப்பட வேண்டியிருந்தது. செயற்திட்டத்தின் இறுதியில் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட ஒன்றிணைந்த வங்கி

பிணையொன்றின் (Corporate gurantee) அடிப்படையில் ஒப்பந்தக் காரருக்கு வங்கிப் பிணையொன்றை வழங்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய இயந்திர உபகரண இருப்பை மீள ஏற்றுமதி செய்தமையை உறுதிப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தமையினால் உரிய ஒப்பந்தகாரரினால் கொடுப்பனவுகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்த ரூபா 4,096,000 தொகையான சுங்கவரி செலுத்தும் பொறுப்பு கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டு இது தொடர்பாக இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடியாதிருந்ததாக தலைவர் அறிவித்திருந்தார்.

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 39,408,404 செலவிடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட பின்வரும் செயற்திட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்ட காரணத்தினால் அச் செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினங்களில் எத்தரப்பினருக்கும் எவ்வித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.

| செயற்திட்டம் | செலவினம் |
|---|---|
| | ரூபா |
| பேரேவெவ திருப்புதல் செயற்திட்டம் | 11,317,985 |
| பண்டாரவல நகர மத்திய செயற்திட்டம் கூறு இல. 2 | 3,455,809 |
| பண்டாரவல நகர மத்திய செயற்திட்டம் கூறு இல. 4 | 3,229,457 |
| நுவரெலிய இஹல உன்னதாங்ச விளையாட்டுத் தொகுதி நிர்மாணச் செயற்திட்டம் | 21,405,153 |
| | 39,408,404 |

(ஆ) எண்டேறமுல்ல மற்றும் தலவத்துகொட செயற்திட்டங்களின் கிரயமான முறையே ரூபா 15,653,406 மற்றும் ரூபா 320,930 தொகைகள் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தன.

(இ) 1996 ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் கம்பனியொன்றில் ரூபா 1,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகைகளுக்காகவும் பெறுமதி குறைவிற்காக கணக்குகளில் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் முதலீடு செய்யப்பட்ட திகதியிலிருந்து இதுவரை எவ்வித முதலீட்டு இலாபங்களும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 1998 ஆம் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட ரீல் எஸ்டேட் தனியார் கம்பனியில் ரூபா 2 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக கூட்டுத்தாபனத்திற்கு ஒருநாளும் பங்கிலாபம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. இச்சந்தர்ப்பம் வரையில் இக் கம்பனி கலைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பதவியணியினர் நிருவாகம்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,339 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 1,177 ஆக இருந்தமையினால் பதவியணியினரில் 162 பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன. அதனை நிரப்புவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வெற்றிடங்களில் நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தில் 20 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அது நிறுவனத்தின் வினைத்திறனைக் குறைக்கும் வகையில் தாக்கமளித்திருந்தது. எவ்வாறாயினும் இந்த வெற்றிடங்களில் அனேகமானவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தலைவர் அறிவித்திருந்தார்.

## 4. கணக்களிப்பும் நல் ஆளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் எவை என்பது தொடர்பாக உரியவாறு இனங்கண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டம், கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு என்பனவற்றுடன் சமாந்தரமாக இல்லாதிருந்ததுடன் நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையுடன் உரிய முறையில் இணக்கஞ் செய்வது பொருத்தமற்றிருந்ததுடன் கருத்திற் கொள்ளக்கூடிய முரண்களும் அவதானிக்கப்பட்டன.

### 4.2 கொள்வனவுத் திட்டம்

கூட்டுத்தாபனத்தினால் 2011 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன்பட்டோரிடம் இருந்து பணம் அறவிடப்படுதல்
(ஆ) வாடிக்கையாளர்களிடம் இருந்து முற்பணம் பெற்றுக்கொள்ளல்
(இ) ஒவ்வொரு பிரிவுகளிலுமுள்ள தகவல்களை தொடர்புபடுத்துதல்
(ஈ) மணல் இருப்பைக் கணிப்பீடு செய்தல்
(உ) கணக்கீடு